TAMIL NADU LEGISLATURE LIBRARY
20 JUN 1978
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக் கிழமை, 1974 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Report of Kothari Commission.

*** 664 *Q*.—Thiru N. DENNIS, Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—**

(*a*) whether the Centre has sought the views of the State Government on the Report of the Kothari Commission on Education ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) ஆம். கோதாரி கல்விக் கமிஷனின் பரிந்துரைகளின் மேல் மாநில அரசுகளின் கருத்துக்களை 1966 ஜூலையில் மைய அரசுக் கல்வித் துறை கோரியது. தமிழ்நாட்டு அரசின் கருத்துக்கள் 1967 சனவரியில் அனுப்பி வைக்கப்பட்டன.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, கோத்தாரி கல்விக் கமிஷனின் சிபார்சுகளில் முக்கியமான செக்யூரிடி ஆப் சர்வீஸ், ப்ரொஃபசர்கள், ட்யூடர்கள் ஆகியவர்களுடைய சர்விஸ் கண்டிஷன்கள், இன்க்ரீஸ் இன் ஸ்கேல்ஸ் ஆப் பே, பதினான்கு வருடப் படிப்பா, பதினைந்து வருடப் படிப்பா என்பவைபற்றி சர்க்காருடைய கருத்து என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, படிப்பின் பல்வேறு நிலைகளில் 10+2+3 ஆண்டு வரம்பை மேற்கொள்ளத்தக்கது என்று கோதாரி குழு கருதியது. தமிழ் நாட்டில் இப்பொருள் இப்பொழுது ஆய்வில் உள்ளது. ஆண்டு வரம்பை மாற்றினால், ஆகும் முழுச் செலவையும் மைய அரசு தர இசையுமானால் மாற்றுவதற்கான முடிவை விரைவில் இவ்வரசு எடுக்க இயலும் என்று மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY

அது மட்டுமல்லாமல், திரு. சுக்லா அவர்கள் தலைமையின் கீழ் அமைந்த குழு எல்லா மாநிலங்களுக்கும் சென்று அவர்கள் விரிவான அறிக்கை தர இருக்கிறார்கள். அந்த அறிக்கையை இந்த அரசு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. மாற்றம் செய்யும்போது சற்று கூடுதல் செல வாகும். அந்தக் கூடுதல் செலவை மைய அரசு தர வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆசிரியர்கள் அந்தஸ்து, சம்பளம், பதவி உயர்வு, நலம் போன்றவைகளைப் பொறுத்து தமிழ் நாடு அரசு ஆசிரியர்களுக்குச் செய்துள்ள நலன்கள் வேறு எந்த மாநில அரசையும் விடக் குறைந்தவை அல்ல.

தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ள சம்பள விதங்கள் கோத்தாரி குழு பரிந்துரைத்த சம்பள விதங்களைவிட ஒரு சில வகை ஆசிரியர்களுக்கு கூடுதலாக இருக்கலாமே தவிர, குறைவாக இல்லை. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும், இன் சர்வீஸ் ட்ரெயினிங் தரவேண்டும் என்று கோதாரி கமிஷன் பரிந்துரைத்துள்ளது. இது கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் மும்முரமாகச் செயல்படுகிறது.

இப்படிச் சிலபல கருத்துக்களை கோத்தாரி கமிஷன் கூறியதைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. சிலபல கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, தனியார் துறையிலே பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கு நேரடியாக செக் மூலமாக சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா? இன்டர்மீடியட் கோர்ஸை திரும்பக் கொண்டுவர அரசு ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது செக் மூலமாகத் தரவேண்டும் என்ற அளவிற்கு கல்லூரி களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அத்தகைய முறை கையாளப்படாமலி ருந்தால் கல்லூரிக் கல்வி இயக்குநருடைய கவனத்திற்குக் கொண்டுவர லாம் என்று நாம் கூறியிருக்கிறோம். 10+2+3 வகுப்புகள் அமைப் பதைப் பற்றி ஆய்விலே இருந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். சுக்லா கமிட்டி அறிக்கை வந்தபிறகு நடைமுறைப்படுத்தலாம். பழைய இன்டர்மீடியட்டை ஏற்படுத்துவதா, ப்ரி-செகண்டரி செக்ஷன் என்று ஏற் படுத்துவதா, இரண்டு வகுப்புகளைப் பள்ளியோடு இணைப்பதா, ஜூனியர் கல்லூரி என்று தனியாக வைப்பதா, அல்லது கல்லூரியிலேயே வைப்பதா என்பது குறித்து இன்னும் முடிவு காணவில்லை. இதில் ஒரு முடிவு கண்ட பிறகு தான் அதுபற்றி நடைமுறைப் படுத்த இயலும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தனியார்க் கல்லூரியைக் கட்டுப்படுத்து கின்ற அளவுக்கு ஒரு மசோதா கொண்டு வரப்படுமா? ஏற்கனவே அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப் போல் கோத்தாரி கமிஷனுடைய ரிபோர்ட் போன்றவற்றோடு இணைக்கக் கூடிய அளவுக்கு அந்த மசோதா இந்த சட்ட மன்றத் தொடரில் கொண்டுவரப்படுமா? அல்லது, எப் பொழுது கொண்டுவரப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைக் கொண்டுவருவதற்கான செயற்குறிப்பை இப்பொழுது நாம் எடுக்கவில்லை. ஆனால், பள்ளிகளைப் பொறுத்த வரையில், பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவருடைய அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது இன்னும் திரும்பி வரவில்லை. அதை நடைமுறைப் படுத்தத் தொடங்கியதற்குப் பிறகு இந்த மசோதா கொண்டுவரவேண்டுமென்றால், இதில் பல்கலைக் கழகம், நிர்வாகத்தினர், அரசு ஆகிய மூன்று தரப்பினரும் கூடி ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகத்தினுடைய இசைவைப் பெற்றுத்தான் அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர முடியும். அதற்கான முயற்சியை இனிமேல்தான் நாம் எடுக்கவேண்டும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, பள்ளிகளைப்பொறுத்து சட்டம் கொண்டுவருகிற மாதிரி, கல்லூரியைப் பொறுத்தும் அப்படி ஒரு மசோதா வராதா என்ற ஆவலுடன் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எனவே, அதற்கு விசேஷ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிப் பாதுகாப்பு மசோதா இன்னும் கையெழுத்தாகி நம்மிடம் வந்து சேரவில்லை. அது வந்து சேர்ந்ததும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகு, கல்லூரியைப் பொறுத்து குழு அமைத்து, மூன்று தரப்பினரும் ஆராய வேண்டும். பள்ளிகளைப் பொறுத்து, நிர்வாகம், அரசு ஆகிய இரண்டு தரப்பினர்தான் ஆனால், கல்லூரிகளைப் பொறுத்து, பல்கலைக் கழகம், நிர்வாகம், அரசு ஆகிய மூன்று தரப்பினரும் சேர்ந்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது. அதைப்பற்றி தனியாக யோசிக்கவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : பெருவாரியாக எல்லாக் கல்வி நிபுணர்களும் இந்தப் பதினைந்து வருஷப் படிப்பை பதினான்கு வருஷமாகக் குறைக்க வேண்டும் என்றும், 11 வருஷத்தை 10 வருஷமாகக் குறைத்து, பி. யு. சி.க்குரிய பாடங்களை (சிலபஸ்) பத்து வருஷத்திற்குள்ளே படித்துக் கொள்ளக் கூடிய முறையில் செய்து, கல்லூரிப் படிப்பை நான்கு வருஷமாக ஆக்க வேண்டும் என்று சொல்லியும் கூட, சர்க்கார் இதில் நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அகில இந்திய கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், 15 ஆண்டு படிப்பு இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சில மாநிலங்களில் 14 ஆண்டு படிப்பு இருந்தாலும், அதை 15 ஆக மாற்றவேண்டும் என்று கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் பரிந்துரையாக இருக்கிறது. சில மாநிலங்கள் 15 ஆக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றன.

கோத்தாரி குழுவினர் கூட, 10-2-3, ஆக 15 ஆண்டுகள் அளவுக்குத்தான் இருக்கவேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளும் நிலை வரும்போது, 11 ஆண்டுகளில் சொல்லிக் கொடுப்பதா, பத்து ஆண்டுகளில் சொல்லிக் கொடுப்பதா,

உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பத்தாண்டாக்கி, மேற்கொண்டு இரண்டு வகுப்புகளைக் கல்லூரியில் இணைப்பதா, அல்லது பள்ளியோடு இணைப்பதா, என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டும்.

சில மாநிலங்களில் கல்லூரியோடு இணைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் ஜூனியர் கல்லூரி என்று தனியாக வைத்திருக்கிறார்கள். எது ஏற்றதாக இருக்கிறது என்று குறித்து சுக்லா குழுவின் பரிந்துரையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

பட்டப் படிப்பு மூன்று ஆண்டுகள் இருக்கவேண்டும் என்பதைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் வற்புறுத்தியிருக்கிறார்கள். மொத்தம் 15 ஆண்டுகள் இருக்கவேண்டும் என்பதை அகில இந்தியாவிலும் வற்புறுத்த வேண்டும் என்பதுதான் மத்திய அரசு கல்வித் துறையின் கொள்கையாக இருந்துவருகிறது. சில மாநிலங்களில் 14 ஆண்டுகள் என்று இருக்கின்றன. அந்த மாநிலங்களும் அதைப் பதினைந்து ஆண்டுகளாகக் கொண்டுவர வேண்டும் என்றுதான் வற்புறுத்தி வருகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கோத்தாரி கல்விக் குழு அறிக்கையில் ஆரம்பப் பள்ளிகளை ஒருங்கிணைப்பது குறித்தும், ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது குறித்தும் ஏதாவது கருத்து தெரிவித்திருக்கிறதா ? அதுபற்றி மாநில அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

Tourist Bungalow at Hogenekkal.

*665 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct a Rest House at Hogenekkal Project Area : and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒகேனக்கல்லில் ரூ. 9.50 லட்சம் செலவில் சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்டி வருகிறது சுற்றுலா மாளிகை 1974 ஏப்ரல், மே திங்களில் திறக்கப்படும். இம் மாளிகையில் இருவர் தங்கும் 31 அறைகளும், சுமார் 30 முதல் 40 பேர் தங்கக்கூடிய துயிலிடம் ஒன்றும் இருக்கும்.